சார்பு நீதிமன்றம், மேலூர்
நாள்: 05.11.2025
வா.சா.2 – பஞ்சு W/o நாகராஜன்
O.S. No.2/2024
(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)
குறுக்கு விசாரணை :

நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு திருமணம் ஆகிவிட்டது. நான் தற்போது தொந்திலிங்கபுரத்தில் வசித்து வருகிறேன். என்னுடைய ஊரில் இருந்து வழக்கு சொத்து சுமார் 10 கி.மீ தொலைவில் உள்ளது. முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை என் அண்ணன் பொன்னுச்சாமி தான் கூறினார். என் உடன்பிறந்தவர்கள் என்னையும் சேர்த்து மொத்தம் 5 பேர். 2 அண்ணன், 2 அக்காமார்கள். முருகேசன் என்ற அண்ணன் வெளிநாட்டில் வசித்து வருகிறார். 2023-24 ல் வெளிநாட்டில் இருந்தவர் இந்தியா 2023-24ல் வரவில்லை. வழக்கு சொத்திற்கு மூன்று புரமும்பிரதிவாதி ராஜ்குமார் நிலம் இருக்கிறது என்றால் சரிதான். ஒரு பக்கம் ஓடை இருக்கிறது. என் தந்தை சின்னனுக்கு 2 தாரம் என்றால் சரியல்ல. என் தாயார் ஒருவர் தான் மனைவி. என் அம்மா பெயர் சரசு, இந்த வழக்கின் 6வது வாதி. என் அப்பா சேந்தான்பட்டியில், ஒரு பெண்ணுடன் சேர்ந்து வசித்து வந்தார். அவர் பெயர் தெரியவில்லை. நான் பிறக்கும் போதே என் தந்தை என் அம்மாவை பிரிந்து சென்றுவிட்டார். அதன்பிறகு என் தந்தைக்கும், எங்கள் குடும்பத்திற்கும் தொடர்பு இல்லை என்றால் சரியல்ல. அவர் அவ்வப்போது வந்து பேசிகொண்டு தான் இருந்தார். என் தந்தை பிரதிவாதியிடம் கடன் வாங்கியிருந்தாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எங்களிடம் சொல்லவில்லை. பதிவு செய்யப்பட்ட ஒத்திபத்திரத்தை என் தந்தை பிரதிவாதிக்கு எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல். என் தந்தைக்கு கையெழுத்து போட தெரியும் ஆனால் அந்த பத்திரத்தில் ரேகை வைக்கப்பட்டுள்ளது. மேலும் அவர் உடல்நிலை

சரியில்லாமல் இருந்தார். என் தந்தை உடல்நிலை சரியில்லாமல் எந்த வருடத்தில் இருந்து எந்த வருடம் வரை இருந்தார் என்றால் அது தெரியவில்லை. ஆனால் ஒருவருட காலம் நடஉடைஇல்லாமல் இருந்தார்.அவர் காலமாகி 2-1/2 ஆண்டுகள் ஆகிறது. ஒரு பதிவு செய்யப்பட்ட பத்திரத்தில் உள்ள விபரங்கள் மட்டுமே செல்லும் என்றால் அதுபற்றி தெரியாது. வா.சா.ஆ.2 மற்றும் 3 ஒத்திபத்திரங்கள் குறிப்பிட்டுள்ளபடி அந்த வருடம் முடிவுற்ற பிறகு தான் பிரதிவாதி காலி செய்து கொடுப்பார்கள் என்றால் சரியல்ல. அதற்கு முன்னர் பிரதிவாதி காலி செய்ய வேண்டிய அவசியம் இல்லைஎன்றால் பணம் என் தந்தை வாங்கியதே எனக்கு தெரியாது. அதனால் காலி செய்து கொடுக்கவேண்டும். இந்த வழக்கின் 2ம் வாதியான என் சகோதரர் பொன்னுச்சாமி தான் தொகையை ரூ.2,25,000 நீதிமன்ற வைப்பீட்டில் கட்டியுள்ளார். வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியாது. வழக்கு சொத்து எங்குள்ளது என்றால் சேந்தான்பட்டியில் உள்ளது. பிரதிவாதிக்கு ஒத்திக்கு விடுவதற்கு முன்பாக சின்னக்காளை என்ற நபரிடம் என் தந்தை ஒத்திக்கு வைத்திருந்தார் அது எனக்கு தெரியும். ஒத்திதொகை அப்போது 12000ரூபாய் என்று பேசப்பட்டது. மேற்படி 12000ரூபாயை பிரதிவாதி ராஜ்குமார் தான் செலுத்தி ஒத்தியை மீட்டெடுத்துள்ளர் என்றால் சரிதான். வெளிநாட்டில் உள்ள அண்ணனுக்கும் எங்களுக்கும் பேச்சுவார்த்தை உள்ளதா என்றால் உள்ளது. பிரதிவாதி ராஜ்குமார் வழக்கு சொத்தை காலி செய்யவேண்டிய அவசியம் இல்லை என்றும் ஒத்திபத்திரத்தின் படி 35 ஆண்டுகள் அவகாசம் இருக்கிறது என்றால் நாங்கள் பணம் பெறவே இல்லை எங்களுக்கு அந்த இடம் ஒன்று தான் இருக்கிறது. பணம் வாங்கிவிட்டு பணம் வாங்கவில்ரைல என்று முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பணம் பெறவில்லை என்றால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும் வேறு பரிகாரம் கேட்டு தான் இந்த வழக்கை தாக்கல் செய்யவேண்டும் என்றால்

சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல. எங்களுக்கு வேறு இடம் கிடையாது வழக்கு சொத்தை வைத்து தான் வீடு கட்டியாகவேண்டும், அதனால் எங்களுக்கு வழக்கு சொத்து தேவைப்படுகிறது. வழக்கு சொத்து விவசாய நிலம் என்றால் சரிதான். தற்போது விவசாயம் அதில் இல்லை. இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.11.05 21:34:20 +0530

Sub Judge

Melur